செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100

## இலக்கியப் புலம்

**நடத்தும்**

# தமிழ் மருத்துவர்களுக்கான சுவடிப் பயிற்சி

## பயிலரங்கம்-08

**(22-08-2023 முதல் 31-08-2023 வரை)**

## அறிவிப்பும் அழைப்பும்

“எழுதப்படுதலின் எழுத்தே” என யாப்பருங்கல விருத்தி கூறுகிறது. தெரித்தல், வரிதல், தீட்டல், பொறித்தல், வரைதல், கீறல், கிறுக்குதல் என்னும் சொற்கள் ‘எழுதுதல்’ என்ற பொருளில் வரும். எழுத்து, சுவடு உடையது ஆதலின் ‘சுவடி’ என்றும் எழுத்துகள் பதியுமாறு எழுதப்பெற்ற ஏடுகளின் தொகுப்பு ‘சுவடி’ எனவும் அழைக்கப்பட்டது.

எழுதப் பயன்பட்ட ஏடுகள் தோடு, மடல், ஓலை, இதழ் என்னும் பெயர்களால் சுட்டப்பெறுகின்றன. இச்சொற்கள் பனை, தெங்கு, கமுகு முதலியவற்றின் இலையைக் குறிக்கும் மரபுச் சொற்களாகும். இதில் தென்னகம் முழுவதும் மிகுதியாகவும் எளிமையாகவும் கிடைக்கக் கூடிய பனை மரத்தின் ஓலையை ஏடுகளாக்கி எழுதிச் சுவடிகளாகப் பண்டைத் தமிழர் தேர்ந்தெடுத்து மிகுதியாகப் பயன்படுத்தினர். ஓலைகளில் எழுத்தாணி கொண்டு எழுதினர். நமது தொன்மையான அறிவுச்செல்வங்கள் இந்தச் சுவடிகளில் எழுதப்பட்டுக் காலந்தோறும் ஒவ்வொரு தலைமுறைக்கும் வழங்கப்பட்டன.

தொல்தமிழரின் மரபார்ந்த செல்வங்களில் ஒன்றான தமிழ் மருத்துவம் சார்ந்த அறிவும் இத்தகைய சுவடிகளில் பல்வேறு நூல்களாக இன்றைக்கும் கிடைக்கின்றன. இன்றளவிலும் பல்லாயிரக்கணக்கான சித்த மருத்துவச் சுவடிகள் நூலாக்கம் செய்யப்படாமலும் இற்றை நாள் சித்த மருத்துவர்கள் இந்த அறிவுச் செல்வத்தைச் சுவடி வடிவில் படிக்க இயலாமலும் இன்னலுக்குள்ளாகி வருகின்றனர்.

அதைப் போக்கும் வகையில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் "தமிழ் மருத்துவர்களுக்கான சுவடிப் பயிற்சி" என்னும் பயிலரங்கை நடத்த உள்ளது.

தமிழ் மருத்துவர்கள் நமது ஓலைச் சுவடிகள் குறித்தும் சுவடியியல் நுணுக்கங்கள் குறித்தும் மருத்துவச் சுவடிப் பதிப்புகள் குறித்தும் செயல்முறையுடன் கூடிய பயிற்றுரையின் மூலமாகக் கற்றறிந்து கொள்ளுதலை இப்பயிலரங்கம் முதன்மை நோக்கமாகக் கொண்டுள்ளது. தமிழ் மருத்துவர்கள் நேரடியாகப் பயன்கொளத்தக்கவாறு நிகழ்த்தப்பெறவுள்ள இப்பயிலரங்கில் சுவடியியல் அறிஞர்கள், சுவடிப் பதிப்பு வல்லுநர்கள், சித்த மருத்துவச் சுவடிகளைப் பதிப்பித்த துறை சார்ந்த மருத்துவ அறிஞர்கள் பயிற்சி அளிக்கவுள்ளனர். சித்த மருத்துவர்களையும் சித்த மருத்துவ முதுநிலை / முனைவர் பட்ட ஆய்வாளர்களையும் இப்பயிலரங்கில் பங்கேற்றுப் பயன்பெற்றிடச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் அழைக்கின்றது.

பயிலரங்க விதிமுறைகளும் விவரங்களும் கீழ்வருமாறு:

1. பயிலரங்கில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கை – 30.
2. பயிலரங்கம் நடைபெறும் நாட்கள்: 22-08-2023 முதல் 31-08-2023 வரை 10 நாட்கள்.
3. பயிலரங்கு நேரம்: முற்பகல் 10.00 – 1.00 வரை, பிற்பகல் 02.00 – 05.00 வரை.
4. பங்கேற்பாளர்களே தங்குமிடத்தை ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.
5. இந்திய அரசு விதிமுறைகளின்படி பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படி, நாட்படி வழங்கப்படும்.
6. பகலுணவும் தேநீரும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.
7. பயிலரங்கில் கலந்துகொள்ள விழைவோர் கீழே தரப்பட்டுள்ள விண்ணப்பத்தினை நிறைவுசெய்து workshope@cict.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவேண்டும். இப்பயிலரங்கைப் பற்றிய கூடுதல் தகவல்களைத் தெரிந்துகொள்ள மேற்கண்ட மின்னஞ்சல் மூலமாக மட்டுமே தொடர்புகொள்ளவேண்டும்.
8. விண்ணப்பக் கட்டணம் ஏதும் இல்லை.
9. விண்ணப்பம் உரிய வழியாக அனுப்பிவைக்க வேண்டும்.

10. செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்குப் புலனம்/மின்னஞ்சல் வழியாக ஆணை அனுப்பிவைக்கப்படும்.
11. விண்ணப்பம் வந்துசேரவேண்டிய இறுதி நாள்: 16-08-2023. இதற்குப் பின்வரும் விண்ணப்பங்கள் ஏற்கப்படமாட்டா.
12. இப்பயிலரங்கில் பங்கேற்போர் 38 அமர்வுகளிலும் தொடர்ந்து கலந்துகொள்ளவேண்டும். அமர்வுக்குத் தாமதமாக வருவதைத் தவிர்த்தல் வேண்டும். தாமதமோ இடைநிற்றலோ இருப்பின் நாட்படியும் சான்றிதழும் வழங்கப்படமாட்டா.
13. இப்பயிலரங்கில் பங்கேற்கத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு 17-08-2023 அன்று தகவல் தெரிவிக்கப்படும்.
14. பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிகளைப் பின்பற்றிட வேண்டும்.

## இலக்கியப் புலம்

நடத்தும்

## தமிழ் மருத்துவர்களுக்கான சுவடிப் பயிற்சி

## பயிலரங்கம் - 08

(22.08.2023 - 31.08.2023)

### விண்ணப்பப் படிவம்

<table>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">பெயர்|<br>Name</td><td>தமிழ்</td><td colspan="5"></td><td rowspan="4" colspan="2">நிழற்படம்/<br>Photo</td></tr>
<tr><td>English</td><td colspan="5"></td></tr>
<tr><td>2.</td><td>பிறந்த நாள்/வயது |<br>Date of Birth/Age</td><td colspan="6"></td></tr>
<tr><td>3.</td><td>பாலினம் | Gender (✓)</td><td>ஆண்/<br>Male</td><td></td><td>பெண்/<br>Female</td><td></td><td>திருநங்கை/<br>Transgender</td><td></td></tr>
<tr><td>4.</td><td colspan="3">வகுப்பு | Class (✓)</td><td>பொது/<br>General</td><td></td><td>இ.பி.வ.|<br>OBC</td><td></td><td>பட்டியல் இனம் |<br>SC/ST</td><td></td></tr>
<tr><td>5.</td><td colspan="3">கல்வித் தகுதி |<br>Educational Qualification</td><td colspan="6"></td></tr>
<tr><td>6.</td><td colspan="3">பணியனுபவம் |<br>Working experience</td><td colspan="6"></td></tr>
<tr><td>7.</td><td colspan="3">முதுநிலை / முனைவர் பட்டப் படிப்பில் சேர்ந்த நாள் / ஆண்டு |<br>Date of Joining & year in M.D. (Siddha) & Ph.D.</td><td colspan="6"></td></tr>
<tr><td>8.</td><td colspan="3">முதுநிலை & முனைவர் பட்ட ஆய்வுத் தலைப்பு | M.D. (Siddha) & Ph.D. Research Topic</td><td colspan="6"></td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 9. | பல்கலைக்கழகம்/கல்லூரி/நிறுவன முகவரி (தொடர்பு எண் & மின்னஞ்சல்) \| University/College/Institute Address (Contact Number & Email) | |
| 10. | இல்ல முகவரி & தொடர்பு எண் \| Residential address & Contact Number | |
| 11. | புலன எண் \| WhatsApp Number | |
| 12. | செம்மொழி நிறுவனம் முந்தைய கல்வியாண்டுகளில் நடத்திய பயிலரங்குகளில் கலந்து கொண்டீர்களா? ஆம் எனில் விவரம் தருக \| Did you attend the workshop conducted by the CICT in previous academic years? If yes, please give details | ஆம் \| Yes<br>இல்லை\| No |
| | | |

**கையொப்பம்**

இடம்:

நாள்:

நெறியாளர்/துறைத் தலைவர்

முதல்வர்/பதிவாளர் கையொப்பம்

உரிய முத்திரையுடன்